**ரத்தோட்ட பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2010 மே 31 ஆந் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ரத்தோட்ட பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடத்திற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 1,048,584 குறைத்துக் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. | கணக்கு சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2020 ஆம் வருடத்தின் இறுதிக் கணக்கில் அதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | வருடத்திற்குரிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா. 469,000 குறைத்துக் கணக்கடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கு சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2020 இல் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | அறவிடப்படாத மொத்தம் ரூபா. 548,035 உடைய ஐந்து நிலுவைகளாக கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்கு சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2020 இல் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ரூபா. 259,850 பெறுமதியுள்ள துண்டாக்கப்பட்ட காணிகள் நான்கு, கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்கு சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2020 இல் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (உ) | நன்கொடையாக கிடைக்கப்பெற்ற ரூபா. 46,175 பெறுமதியுடைய வரவேற்பு கருமபீடம் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்கு சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2020 இல் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஊ) | நன்கொடையாக கிடைக்கப்பெற்ற நீர் சுத்திகரிக்கும் கருவி 2 இன் பெறுமானம் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | கணக்கு சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2020 இல் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (எ) | உடகபுவித கம்பிடிய வீதி அபிவிருத்தியில் நிர்மானத்திற்கான செலவீனம் ரூபா. 100,000 கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | கணக்கு சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2020 இல் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஏ) | ரத்தொட்ட நகர சபை கட்டிடம் புனர்நிர்மாணம் செய்வதில் நிர்மானத்திற்கான பெறுமதி ரூபா. 668,618 கூடுதலாக கணக்கிடப்பட்டுள்ளது. | கணக்கு சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2020 இல் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஐ) | செயற்படுத்தப்படாத ரூபா. 1,825,000 உடைய 4 நிர்மானங்கள் கடன் கொடுத்தோர்களின் கீழ் கணக்கிடப்பட்டுள்ளது. | கணக்கு சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2020 இல் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஒ) | சபையின் உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் மீது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்கள் குறித்து கிடைக்கப் பெற்ற ரூபா. 867,265 பணம் கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்கு சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2020 இல் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஓ) | செலுத்தப்பட வேண்டியதாக அடையாளம் முடியாத ரூபா 5,536,422 களஞ்சியசாலை கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்கு சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2020 இல் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | ஒப்பந்த ஆவணங்கள் மற்றும் கோப்புக்களின் படி செலுத்தப்பட அவசியமில்லாத ரூபா. 928,089 நிர்மாண கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கு சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2020 இல் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (க) | ரத்தொட்ட கம்மடுவ பிடித வீதி அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலையில் கொடுப்பனவு நடவடிக்கைகள் முடிக்கப்பபட்டிருந்த போதிலும் ரூபா. 200,000 கடன் வழங்குனர்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | கணக்கு சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2020 இல் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

-----------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மொத்தம் ரூபா 121,877,636 தொகையான 5 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றிற்காக அட்டவணைகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளுக்கு இடையே ரூபா 23,041,104 வேறுபாடு காணப்பட்டது. | கணக்கு மீதிகளை சீராக்க வேண்டும் | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கிறேன். |

**1.3.3 தொங்கல் கணக்குகள்**

----------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1997 ஆம் ஆண்டிலிருந்து மாறாது முன்கொண்டு வரப்பட்டிருக்கும் தொங்கல் கணக்கின் மீதியான ரூபா 15,462 தொகையை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளில் தவறை இனங் கண்டு சீராக்கப்பட வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கிறேன். |

### 1.3.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| **கிடைக்க வேண்டிய கணக்குகள்** | | |
| (அ) 1 ஆண்டிற்கு மேற்பட்ட 5 வருடங்களுக்கும் குறைந்த ரூபா 10,895,574 ஆன மீதிகள் 05 ஆண்டுகளுக்கு மேல் தீர்வு செய்யாத ரூபா 3,105,518 கிடைக்க வேண்டிய மீதிகள் இருந்தன. | கிடைக்க வேண்டிய மீதிகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஆ) **செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| 1 ஆண்டிற்கு மேற்பட்ட 5 வருடங்களுக்கும் குறைந்த ரூபா 15,048,818 5 ஆண்டுளுக்கும் மேலாக தீர்வுசெய்யாமல் காணப்படும் ரூபா 7,237,644 ஆன செலுத்த வேண்டிய மீதிகள் காணப்பட்டன. | கடன்கொடுததோர் மீதிகளைத் தீர்க்க வேண்டும். | அவதானிப்பினை ஏஏற்றுக் கொள்கிறேன். |

### 1.3.5 கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| ரூபா 63,891,876 பெறுமதியான 03 கணக்குகளுக்குரிய சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | ஆவணங்கள் மற்று ம் மெய்மையாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு நாளதுவரையாக்கப் பட வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கிறேன். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1987 இல 15 பிரதேச சபை சட்டத்தின் 24 ஆம் பகுதி | - | சபைகுரிய வீதிகள் மற்றும் குறுக்கு வீதிகளின் பெயர் விபரங்களைக் கொண்ட பாதை பொருளிருப்புப் பட்டியலொன்றைப் பேணவில்லை. | குறுக்கு வீதிகள் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு, பேணப்பட வேண்டும். | ஆவணங்களை நாளது வரையாக்க தயாரிப்பது நடவடிக்கை எடுக்கின்றேன் |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் 218 | - | சபைக்குச் சொந்தமான காணிகளும் கட்டடங்களும் ஒவ்வொரு ஆண்டும் கணக்கெடுக்கப்படவில்லை. | பொருள் மெய்மையாய்வு விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு ரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(3) | 116,294 | 9 சநதர்ப்பங்களுக்குரிய பணம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | நி.பி 571(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,240,576 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,204,547 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,300,000 | 1,402,688 | 827,020 | 1,686,002 | 1,355,152 | 1,381,466 | 1,696,965 | 1,219,752 |
| (ii) | வாடகை | 2,706,520 | 2,801,718 | 2,357,577 | 1,846,897 | 3,024,580 | 2,646,529 | 2,646,529 | 1,402,757 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 900,000 | 648,436 | 648,436 | - | 750,000 | 902,625 | 902,625 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 8,169,494 | 7,792,027 | 6,927,984 | 9,024,950 | 20,264,358 | 8,150,147 | 12,400,595 | 8,170,707 |
| | மொத்தம் | 13,076,014 | 12,644,869 | 10,761,017 | 12,557,849 | 25,394,090 | 13,080,767 | 17,646,714 | 10,793,216 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி நிர்வாகம்) 32 மற்றும் 42 ஆம் பிரிவுகளுக்கு அமைய வீதவரி நிலுவையில் இருந்த நபரின் சொத்து தடை செய்வது தொடர்பாக தடையுத்தரவு வழங்கப்பட்டிருக்கவில்லை. | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 159 (i) ஆம் பிரிவின் பிரகாரம் கவனம் செலுத்தப்பட வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்கிறேன். |

2.2.3 **வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 96 கடைகள் தொடர்பான புதிய மதிப்பீடொன்று பெற்றுக் கொள்ளப்பட்டு ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளப்பட்டு கடை ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட வேண்டும். | 91 கடைகள் தற்போது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், எஞ்சிய 5 கடைகள் மதிப்பீடு செய்வதற்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 35 கடைகளின் முதலாவது குத்தகைகாரர் ரூபா 25,000 முதல் ரூபா 6,000 வரையான வீச்சில் கடை உப குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. | பரிசீலனை செய்து அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தகவல்களை உறுதி செய்து கொள்வதற்காக தற்போதைக்கு ஆய்வொன்று நடத்தப்பட்டுள்ளது. |
| (இ) | ரஞ்சன் விஜேரத்ன மாவத்தையில் இலக்கம் 3 ஆம் கடையின் முதல் குத்தகைதாரர் மரணமடைந்த நிலையில் வரிசெலுத்துவோருக்கு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள இடமளிக்காது பின்னர் இதிலிருந்து வெளியேற்றுவதற்கு சபை நடவடிக்கை எடுக்கையில் வரிசெலுத்துவோர் மூலம் சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் தீர்க்கப்பட வேண்டும். | உரிய கடையின் இடைக்கால வரிசெலுத்துவோர் இல்லாமையினால் , சபை மூலம் சட்டத்தின் பிரகாரம் வரி செலுத்தியிருந்த குத்தகையாளர் மற்றும் ஊழியர் ஒருவருக்கு இடையே ஏற்பட்ட சர்ச்சையின் காரணமாக இவ் வழக்கு மீண்டும் எழுந்துள்ளது. |
| (ஈ) | பெட்டி கடைகளுக்காக அறவிடப்பட வேண்டிய கடை வாடகை ரூபா. 163,837 அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவைத் தொகையை அறவிடப்பட வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்கிறேன். |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2000 ஆம் ஆண்டிலிருந்து முன் கொண்டு வரப்பட்ட அனுமதிப்பத்திர கட்டணங்களுக்கான நிலுவைத் தொகை ரூபா 405,686 ஆக இருந்தது. | பெற அனுமதிப்பத்திர கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்கிறேன். |

### 2.2.5 ஏனைய வருமானங்கள்

**(அ) நீர் கட்டணம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா. 8,616,061 நீர் கட்டண நிலுவையொன்று இருந்ததுடன் அந் நிலுவையை அறவிடுவதற்கு போதுமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந் நிலுவையில் 1998 இலிருந்து நிலவிவரும் ரூபா. 1,257,266 நிலுவையொன்று மற்றும் தகவல் தேடிப் பெற முடியாத தற்போது துண்டிக்கப்பட்டுள்ள நீர் தொடர்புகளுக்கு உரிய ரூபா. 1,659,161 நிலுவையும் காணப்பட்டது. | அறவிடப்பட முடியுமான நீர் கட்டணம் விரைவாக அறவிடுவதற்கும் அறவிடப்பட முடியாத நிலுவைத் தொகை தொடர்பாக முறையான விசாரணையொன்றை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்கிறேன். |
| (ii) | 8 நீர்த் திட்டங்களில் விநியோகிக்கப்படுகின்ற நீரின் தரப் பரிசோதனை நடாத்தப்பட்டிருக்கவில்லை. | தரமான நிலையுடனான சுத்தமான குடி நீர் வழங்கப்பட வேண்டும். | தற்போது நீரின் தரத்தை பரிசோதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியத்தருகிறேன். |

(ஆ) **முச்சக்கர வண்டிக் கட்டணம்**

-----------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிலவுகின்ற முச்சக்கர வண்டிகள் சம்பந்தமாக ஆய்வொன்று நடாத்தப்படாத நிலையில் நிறுத்தும் இடம் தொடர்பான அறிமுகமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் நிறைவேற்றப்பட்டு முச்சக்கர வண்டிகள் ஒழுங்கு முறைப்படுத்தப்பட வேண்டும். | புதிய உப விதிகள் தற்போதைக்கு வரைவுபடுத்தப்பட்டுளள்துடன் அதன் பிரகாரம் ஆய்வொன்றும் தற்போதைக்கு செய்யப்பட்டுள்ளது. |

(இ) வேறு

---------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| கைக்காவல பெல்ஸ்.்.பா சுரங்கத்தில் பெல்ஸ்.்.பா போக்குவரத்து தொடர்பாக அறவிடப்பட வேண்டிய வருமானத் தொகையான ரூபா 582,800 ஐ அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய வருமானத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கிறேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

### 3.1 செயலாற்றல்

------------------

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 07 உப விதிகளைஷ் பிறப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனத்து உபவிதி விதிகள் பிறப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

(ஆ) கைவிடப்பட்ட பணிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா. 400,000 மதிப்பீட்டின் கீழ் தயாரிக்கப்பட்டிருந்த தொழிலாளர்களுக்கான ஓய்வறை கட்டுமானப் பணிகள் 2020 மே 20 வரையிலும் மேற்கொள்ளப்படவில்லை. | திட்டமிடப்பட்ட விடயம் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சினால் 2017 ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி *NP/SP/SDG/17* இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடையும் திட்டங்கள் எவையும் ஏற்பாடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக் கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | திட்டத்தின் குறைபாடுகள் இனங்காணப்பட்டு எதிர்காலத்தில் முறையாக திட்டமிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | புறநெகும திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் ரூபா.29,717,248 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பொல்வத்தாகந்த நீர்த் திட்டம் 2017 ஜூன் 30 ஆம் திகதி குறைபாடுகளுடன் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட நிலையில் அதில் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் இல்லாமல் ரூபா.1,485,862 பெறுமதியான பாதுகாப்பு பிணை உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது. | குறைபாடுகள் விரைவாக சரி செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் காலத்தில் குறைபாடுகள் சரி செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பாதுகாப்பு பிணைமுறை மீண்டும் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 3 ஆண்டுகளில் கட்டட விண்ணப்பப் படிவங்கள் 487 முன்வைக்கப்பபட்டு அதில் 364 அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில் 41 பேருக்கு மாத்திரம் இணக்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. | இணக்க சான்றிதல்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலத்தில் 2 வருடங்கள் அதிகப்படியான அங்கீகரிக்கப்பட்ட நிர்மாணத் திட்டங்களுக்கான கடிதங்கள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணி வெற்றிடங்கள் 21 ஆக காணப்பட்டன. | பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சேவையில் சேர்த்ததுக் கொள்ளப்பட்டிருந்த வீதி ஊழியர்கள் 4 பேர் வேறு கடமைகளுக்கு நியமிக்கப்பட்டிருந்தார்கள். | ஊழியர்கள் வழக்கமான கடமைகளுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்கள் நிலவி வந்த காரணத்தால் இவ்வாறு நியமிக்க வேண்டி ஏற்பட்டது. |
| (இ) | நீண்ட காலமாக நிலவி வரும், வேலையை விட்டு நீங்கிய மற்றும் மரணமடைந்த ஊழியர்கள் 5 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 53,457 கடன் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடன் தொகைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பல ஆண்டுகளாக நிலவி வரும் நிலுவைத் தொகை கடன் ஆவணங்களின் மூலம் பதிவழிக்கவும், ஏனைய கடன் அறவிடவும் நடவடிக்கை எடுப்பேன். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை மூலம் பராமரிக்கப்படுகின்ற 34 கட்டிடங்கள் மற்றும் 22 கல்லறை நிலங்களின் உரிமையை கையேற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட ரீதியான உரிமையை கையேற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அளக்கும் வேலைகள் முடிவடைந்ததும் உடனடியாக கையேற்கும் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | இடங்களின் உரிமையை கையேற்றுக் கொள்ளாமையினால் அங்கெலி மெடில்ல மற்றும் கிவுல கல்லறை நிலங்களில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் குடியேறி இருப்பதுடன் தற்போது சபையுடன் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அங்கெலிமெடில்ல இடத்திற்காக வழக்கறிஞர் கட்டணமாக ரூபா. 46,500 செலவிடப்பட்டுள்ளது. | உரித்தைக் கையேற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிவுல கல்லறை நில உரித்தைப் கையேற்றுக் கொள்ளல் தொடர்பான நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் அங்கெலி மெடில்ல நிலம் தொடர்பான வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1999 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பல்வேறு நடவடிக்கைகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா. 174,687 பெறுமதி கொண்ட 11 முற்பண மீதிகள் தீர்வு செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணம் தீர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கிறேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

**3.5.1 விளைவற்ற / குறைப்பயன்பாட்டிலான சொத்துக்கள்**

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாவனைக்கு உதவாத ரூபா 944,400 பெறுமதியான 7 வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. | கைதவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முறைப்படி ஏலத்தல் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் |

**3.5.2 வாகன பயன்பாடு**

---

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கம்பெக்டர் வாகனம் 434 கிலோ மீற்றர் பிரயாணம் செய்ததாக போலியாக ஓட்ட குறிப்பு காட்டப்பட்டு 296 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா. 30,760 முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டிருந்தது. | முறையான பரிசோதனையொன்று மேற்கொன்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | உரிய பணத்தொகை சாரதியிடம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | டிப்பர் வண்டியில் மைலோ மீற்றருக்கு மேலதிகமாக 2693 கிலோ மீற்றர் கூடுதலாக காட்டப்பட்டு எரிபொருள் 1077 லீற்றருக்காக ரூபா. 112,029 முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டிருந்தது. | முறையான பரிசோதனையொன்று மேற்கொன்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இது தொடர்பாக சாரதியிடம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் எதிர் வரும் காலங்களில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நீர் பவுசர் மைலோ மீற்றருக்கு மேலதிகமாக 5637 கிலோ மீற்றர் நாளாந்த ஓட்டக் குறிப்புக்களில் கூடுதலாக காட்டப்பட்டு 2253 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா. 234,416 முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2019 ஏப்ரல் 24 ஆம் திகதி முதல் 2019 ஒக்டோபர் 6 வரை எழுதி வைக்கப்படாத ஓட்டக்குறிப்புடன் இப் பெறுமதி மேலும் கூடிய பெறுமதியொன்று எடுக்ககூடும் | முறையான பரிசோதனையொன்று மேற்கொன்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இவ் வாகனத்தில் மைலோ மீற்றர் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படாது இருந்ததுடன் ஓட்டக் குறிப்பு மட்டும் முன்னால் குறிப்பிடப்படுவதை அறியத் தருகிறேன். |
| (ஈ) | 4 வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபட்டதாக சான்றுப்படுத்தல்கள் எதுவுமின்றி 19391 கிலோ மீற்றர் ஓடியதாகவும் 95 மணித்தியால இயந்திர நேரம் பாவிக்கப்பட்டதாகவும் அதற்காக 4225 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா. 454,559 செலவிடப் பட்டிருந்தது. | முறையான பரிசோதனையொன்று மேற்கொன்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பிரயாண அட்டவணை பராமரிப்பதற்காக சாரதிகள அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள் என்பதை அறியத் தருகிறேன். |
| (உ) | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் கேள்விக் குழுவின் பரிந்துரைக்கு மாறாக செயற்பட்டு 2019 திசெம்பர் 28 ஆம் திகதி வேறு நிறுவனமொன்றினால் உடன் விலைக்கு பெற்றுக் கொண்டு கெப் வாகனத்தில் கெனபிய பொருத்த ரூபா. 251,500 செலவிடபப்ட்டிருந்தது. | முறையான பரிசோதனையொன்று மேற்கொன்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | உடன் விலைக்குப் பெற்றுக் கொண்ட நிறுவனத்தில் விலைகள் குறைத்துக் இருப்பதாலும் உத்தரவாத காலம் உயர்வாக இருப்பதாலும் தரத்தில் உயர்வானதாலும் அந் நிறுவனத்தால் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டன. |

## 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இன 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 19(1)(xi) ஆம் பிரிவின் படி விடயப் பொறுப்பான அமைச்சரின் முன் அங்கீகாரமின்றி கைச்சாத்திடப்படாது 3 ரூட் 37.5 பேர்ச் காணி 1971 ஆம் ஆண்டிலிருந்து பொலிஸ் நிலையத்திற்காக நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வது தொடர்பாக 2017 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிய ரூபா. 171,100 நிலுவை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தங்கள் ஏற்படுத்தவும் கட்டணம் அறவிடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். ஒப்பந்தமொன்றை தயாரித்து கையொப்பமிடுவதற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன் கால வரையரைக்கு ஏற்ற வாடகை செலுத்தப்படாமை குறித்து பொலிஸ் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |

## 3.7 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாவனையிலிருந்து நீக்கப்பட்டிருந்த 6 வாகனங்கள் 2018 ஆம் ஆண்டில் விலை கோரப்பட்டு கூடிய விலை முன்வைக்கப்பட்டிருந்த கேள்விதாரருக்க வாகனம் விற்பனைக்கு செய்ய திட்டமிடப்பட்டிருந்த போதும் பொதுச் சபை இவ்வாகன விற்பனை 2018.07.06 ஆம் திகதி இடை நிறுத்தியிருந்தது. பின்னர் 2018 திசெம்பர் மாதத்தில் கூடிய விலை முன்வைத்த கேள்விதாரரிடம் விசாரிக்கம் போது கோள்விதாரர் கொள்வனவை மறுத்திருந்தார். இக் காரணத்தால் ரூபா. 1,278,000 இற்கு விண்ணப்பிக்கப்பட்ட ஒரு வாகனம் ரூபா. 786,000 பெறுமதிக்கு விண்ணப்பித்த கேள்விதாரருக்கு விற்பனை செய்தமையால் ரூபா. 492,000 நட்டம் ஏற்பட்டிருந்தது. எஞ்சிய 5 வாகனங்களையும் இது வரையில் விற்பனை செய்ய முடியாமலிருந்தது. | இது தொடர்பாக பரிசோதனையொன்றை நடத்தி, தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். இதுவரை நியமிக்கப்பட்ட செயன்முறைக்கு ஏற்ப வாகனங்களை ஏலமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் வருகின்றது. |

**3.8 பெறுகை**

**ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வனராணிய பவுசி மாவத்தை அபிவிருத்தி செய்தல்- ரூபா. 447,640 | | |
| (i) | சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரொருவரின் மேற்பார்வையின்றி வடிகாணிற்காக கொங்கிறீட் இடப்பட்டிருந்தது. | ஒப்பந்தக்காரர் சங்கம் கறுப்பு பட்டியலுக்க உட்படுத்த வேண்டும். | மேற்பார்வையின்றி சங்கத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. |
| (ii) | நிர்மாணிக்கப்பட்டுள்ள காணின் கீழே 16 அடி வரையளவு தூரத்திற்கு கழுவிச் சென்றிருப்பதுடன் அவ்விடங்களுக்கு சுற்றுக் கம்பி பயன்படுத்தப்படவில்லை. கொன்கிறீட் காணின் கீழே 6 அங்குலமாக நிர்மாணிக்க வேண்டியிருப்பினும் அங்கு தடிப்பு 3 ½ அங்குலமாக காணப்பட்டது. | சரியான மேற்பார்வையுடன் வேலை செய்யப்பட வேண்டும். | அப் பகுதிக்கு பொறுப்பான தொழில்நுட்ப உத்தியோகத்தர் மூலம் கொடுப்பனவுகள் செய்வதற்கு பரிந்துரைக்கப்படாத நிலையில் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்பதை அறியத் தருகிறேன். |
| (ஆ) | ரத்தொட்ட பெபொலயாய பாதை புனர்நிர்மாணம்- ரூபா. .1,000,000 | | |
| (i) | கொங்கிறீட் வீதி மேற்பரப்பில் வலது புறமாக நீர் வடிந்து செல்வதை கட்டுப்படுத்துவதற்கு 156’ x 2’-5" x 0-6 " அளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு மதில் பல இடங்களில் உடைந்து, பரிசோதிக்கும் போது அவை இலகுவில் உடையக் கூடிய வகையில் பலவீனமான கொங்கிறீட் கலவை பயன்படுத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | சரியான மேற்பார்வையுடன் மதிப்பிடப்பட்ட தரத்திற்கு வேலை செய்யப்பட வேண்டும். | பாதுகாப்பு மதில் சம்பந்தமாக தரப் பரிசோதனை அறிக்கை பெறப்பட்டு அவ் அறிக்கையில் இங்கு பயன்படுத்திய கொங்கிறீட் பொருத்தமற்ற தரத்தில் காணப்பட்டால் கொடுப்பனவுகள் செய்யப்படமாட்டாது என்பதை அறியத் தருகிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கொங்கிறீட் பாதை ஓரத்தில் வலது புறமாக அமைந்துள்ள காணிற்கு நீர் வடிந்து செல்லும் விதத்தில் கொன்கிறீட் பாதை சாய்வாக அமைக்கப்பட்டிருந்தாலும் அனேகமான இடங்களில் நீர் வடிந்து செல்லாது தேங்கி நிற்கும் ஆபத்து நிலை ஏற்பட்டிருந்தது. | சரியான மேற்பார்வையுடன் மதிப்பிடப்பட்ட தரத்திற்கு வேலை செய்யப்பட வேண்டும். | பட்டியலை வழங்குவதற்கு முன்னர் அக் குறைபாடுகள் நிறைவு செய்து கொள்ள நடவடிக்கை எடுப்பேன் என்பதை அறியத் தருகிறேன். . |
| (இ) | பொல்வத்த புதிய புது மெதுர பாதை புனர்நிர்மாணம்- ரூபா. . 1,000,000 -------------------------------------- | | |
| (i) | 1:2:4 (19 mm) சீமெந்து கலவை பயன்படுத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட கொங்கிறீட் வீதி உடைக்கப்பட்டு பரிசோதித்த போது ஒரு அங்குலமளவு ஆழத்தின் பின் இலகுவில் உடைந்து செல்லக்கூடிய தரத்தில் சீமெந்து , மணல் மற்றும் கல் இணைப்பு இல்லாமல் கொங்கிறீட் பலவீனமாக காணப்பட்டது. | சரியான மேற்பார்வையுடன் மதிப்பிடப்பட்ட தரத்திற்கு வேலை செய்யப்பட வேண்டும். | இப் பகுதியை உரிய சங்கத்தின் மூலம் திருத்தியமைக்க நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |
| (ii) | கொங்கிறீட் பாதையின் இரு புறமும் மேற்பரப்புக்களை நிரப்பி தயார் படுத்தப்படாத காரணத்தால் பாதையில் பிரயாணம் செய்யும் பயணிகளுக்கு மற்றும் வாகனங்களுக்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுக் காணப்பட்டது. | வாகனங்கள் மற்றும் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். | எதிர்வரும் காலங்களில் இரு புறமும் மண் நிரப்பி தயார் படுத்தி வாகனப் போக்குவரத்திற்கு மற்றும் பயணிகளுக்கு ஏற்படக்கூடிய அபாயத்தை குறைக்க நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

**4.** **கணக்களிபபொறுப்பும் நல்லாளுகையும்**

**கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய உள்ளூாட்சி மன்ற ஆணையாளரின் சீபீசீ/சஎல்ஜி/1/9/1/4 ஆம் இலக்க கடிதம் மற்றும் 2014 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய மத்திய மாகாண தலைமை செயலாளரின் சீபீசீ/சீஎம்சீ/1/6 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் காலாண்டிற்கு ஒருமுறை மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுக்கள் கூட்டப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டில் ஒரு குழு கூட்டம் மாத்திரம் நடத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக் கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கின்றேன் |